ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2401/12 – 2024 සැප්තැම්බර් මස 09 වැනි සඳුදා – 2024.09.09
*2401/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 6/2001* (iv)

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம்**

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 105 ஆம் பிரிவின்கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும்,
ஆணைக்குழு.

கொழும்பு,
2024, ஓகத்து 06.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2024 ஆம் ஆண்டின் காப்புறுதித் தரகரொருவராகப் பதிவுசெய்வதற்கான மேலதிக தேவைப்பாடுகள் பற்றிய விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்விதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள், சட்டத்தின் 80 ஆம் பிரிவினால் ஏலவே ஏற்பாடுசெய்யப்பட்ட பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகளுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டும்.

1A- PG6867 – 14(2024/09)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. மீள்காப்புறுதித் தரகுத்தொழிலை நிறைவேற்றுவதற்கு சட்டத்தின் கீழ் தரகரொருவராக பதிவுசெய்யப்படுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், பட்டயம்பெற்ற காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினர் (ACII) அல்லது இந்திய காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினராகத் (AIII) தகைமைகொண்டுள்ள அல்லது சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில் ஒரு காப்புறுதிக் கம்பெனியில் அல்லது காப்புறுதித் தரகுக் கம்பெனியில் மீள்காப்புறுதித் துறையில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகால அனுபவத்துடன் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க சமமான தகைமையைக் கொண்டுள்ள ஆகக்குறைந்தது ஆளொருவரையேனும் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும் அல்லது தக்கவைத்திருத்தல் வேண்டும். அத்தகைய ஆள், அத்தகைய தரகுக் கம்பெனியின் பிரதான அலுவலர் பதவியுட்பட சிரேட்ட முகாமைத்துவ பதவியொன்றை வகிக்கலாம்.

4. நேரடிக் காப்புறுதித் தரகுத்தொழிலையும் மீள்காப்புறுதித் தரகுத்தொழிலையும் நிறைவேற்றுவதற்கு இச்சட்டத்தின்கீழ் தரகரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், தொழிற்பாடுகளின் தகிவேறாக்குகையை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் இரு தொழில்களுக்கும் தனிவேறான அாப்பணிப்புள்ள இருவரைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அவ்விருவரும், தொழில்களைத் தனித்தனியாக நிறைவேற்றுவதற்கு காப்புறுதிக் கம்பெனியொன்றில் அல்லது காப்புறுதித் தரகுக் கம்பெனியொன்றில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகால முகாமைத்துவ மட்டத்திலான அனுபவமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலே 3 ஆம் விதியில் குறப்பீடுசெய்யப்பட்ட ஆள் இதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட மீள்காப்புறுதித் தொழிலுக்கான அர்ப்பணிப்புள்ள ஆளாக நியமிக்கவும்படலாம்.

இவ்விதியின் நோக்கத்துக்காக " சட்டம் " என்பது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம் எனப் பொருள்படும்.

EOG 09 - 0087/1

---

*ச. வ. பி. 6/2001* (iv)

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம்**

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியுடனும் 95அ என்னும் பிரிவுடனும் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 105 ஆம் பிரிவின்கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும்,
ஆணைக்குழு.

கொழும்பு,
2024, ஓகத்து 06.

**விதிகள்**

2016, யூன் 1 ஆந்தேதிய 1969/40 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளினால் திருத்தப்பட்டவாறான 2005, செத்தெம்பர் 29 ஆந் தேதிய 1412/ 30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு விதிகள், அதன் 5 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:-

" 5. (1) சட்டத்தின்கீழ் காப்புறுதி தரகரொருவராகப் பதிவுசெய்யப்பட விரும்புகின்ற அல்லது ஏலவே பதிவுசெய்யப்பட்டுள்ள எவ
ரேனும் ஆள்-

(அ) அவர், மீள்காப்புறுதித் தரகுதொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உட்கருதாவிட்டால், காசாக அல்லது காசுக்குச் சமமான பணத்தொகையொன்றாக இருக்க வேண்டிய, ஐந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத பணத்தொகையொன்றை;

(ஆ) அவர், மீள்காப்புறுதித் தரகுத்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உட்கருதினால், காசாக அல்லது காசுக்குச் சமமான பணத்தொகையொன்றாக இருக்கவேண்டிய பத்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத பணத்தொகையொன்றை,

கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்குமூலதனமாகப் பேணுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்";

(2) இவ்விதியின் நோக்கத்துக்காக -

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம் எனப் பொருள்படும்:

" காசு" என்பது, கையிலுள்ள காசையும் மற்றும் கோரிக்கை வைப்புக்களையும் உள்ளடக்குகின்ற காசு எனப் பொருள்படும்:

" காசுககுச் சமமானது" என்பது, அறியப்பட்ட காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய குறுகிய கால, அதியுயர் திரவநிலை முதலீடுகள் எனப் பொருள்படும் என்பதுடன் அவை பெறுமதியிலான மாற்றங்களின் ஒரு சிறிதளவிலான ஆபத்துக்கு அமைந்தனவையுமாகும்;

இவ்விதி, 2023, ஒற்றோபர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட தரகர்களுக்கு 2025, சனவரி 1 ஆந்தேதியிலிருந்தும் மற்றும் 2023, ஒற்றோபர் 31 ஆந்தேதிக்குப் பின்னர் பதிவுசெய்த தரகர்களுக்கு வர்த்தமானியில் அத்தகைய விதி வெளியிடப்பட்ட தேதியிலிருந்தும் நடைமுறைக்குவருதல் வேண்டும்.

EOG 09 - 0087/ 2

---

*ச. வ. பி. 6/2001* (iv)

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 81 ஆம் பிரிவின் (எ) என்னும் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 105 ஆம் பிரிவின்கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும்,
ஆணைக்குழு.

கொழும்பு,
2024, ஓகத்து 06.

## விதிகள்

2011, யூன் 24 ஆந் தேதிய 1711/25 ஆம் இலக்க, 2018, மே 1 ஆந் திகதிய 2069/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளினால் திருத்தப்பட்டவாறான 2005, செத்தெம்பர் 9 ஆந் தேதிய 1412/30 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் இலங்கை காப்புறுதி ஒழுங்குப்டுத்தல் ஆணைக்குழு விதிகள், அதன் 6 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம், இத்தால் திருத்தப்படுகின்றன:-

" 6. சட்டத்தின்கீழ் தரகரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கென ஆணைக்குழுவுக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்று பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்" -

(அ) மீள்காப்புறுதித் தரகுத்தொழிலை நிறைவேற்றாதிருப்பின், ஒவ்வொரு வகுப்பினதான காப்புறுதித் தரகுத் தொழிலுக்கும் நான்கு இலட்சம் ரூபா கொடுப்பனவின்மீது எனவயேனும் ஏற்புடையற்பாலனவான வரிகளுடன் சேர்த்து அத்தகைய கொடுப்பனவின் மீதான கட்டணமொன்று;

(ஆ) மீள்காப்புறுதித் தரகுத் தொழிலை நிறைவேற்றுவதாகவிருப்பின், ஒவ்வொரு வகுப்பினதான காப்புறுதித் தரகுத் தொழிலுக்கும் ஐந்து இலட்சம் ரூபா கொடுப்பனவின் மீது எவையேனும் ஏற்புடையற்பாலனவான வரிகளுடன் சேர்த்து அத்தகைய கொடுப்பனவின்மீதான கட்டணமொன்று.;

இவ்விதியின் நோக்கத்துக்காக -

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டம் எனப் பொருள்படும்:

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

EOG 09 - 0087/ 3